செ.வெ.எண். 64/மார்ச் தேதி : 28.03.2017

**தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், இண்டூர் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் 100 பயனாளிகளுக்கு ரூ. 47 இலட்சத்து 68 ஆயிரம் 738/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**



தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், இண்டூர் கிராமத்தில் மக்கள் தொடர்பு திட்ட முகாம் மாவட்ட ஆட்சியர் திரு கே. விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (28.03.2017) நடைபெற்றது.

இம்மக்கள் தொடர்பு திட்ட முகாமில் வருவாய் துறையின் மூலம் பட்டா மாறுதல் 32 பயனாளிகளுக்கும், சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 1 இலட்சத்து 16 ஆயிரத்து 500/- மதிப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை 24 பயனாளிகளுக்கும், ரூ. 53 ஆயிரம் மதிப்பில் புதிய குடும்ப அட்டைகள் 10 பயனாளிகளுக்கும், ரூ. 42 இலட்சத்து 5 ஆயிரத்து 670 மதிப்பிலான பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா (PMAY) 2016-17 திட்டத்தின்கீழ் பணி உத்தரவு வழங்குதல் 21 பயனாளிகளுக்கும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் ரூ. 1 இலட்சத்து 63 ஆயிரத்து 350 மதிப்பில் நலத்திட்ட உதவிகள் 3 பயனாளிகளுக்கும், வேளாண்மைத்துறையின் சார்பில் ரூ. 2 இலட்சத்து 30 ஆயிரத்து 218/- மதிப்பிலான டிராக்டர், ரோட்டாவேட்டர், விசைத்தெளிப்பான், செயல்விளக்க மானியம் நிலக்கடை போன்றவை 10 பயனாளிகளுக்கும், என மொத்தம் 100 பயனாளிகளுக்கு ரூ. 47 இலட்சத்து 68 ஆயிரத்து 738/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி பின்னர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைக்கிணங்க அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் ஒருங்கே இணைந்து மாதந்தோறும் கிராமங்களைத் தேர்வு செய்து மக்கள் தொடர்பு திட்ட முகாம் நடைபெற்று வருகிறது. நமது மாவட்டத்தில் 456 வருவாய் கிராமங்கள் உள்ளன. தருமபுரி மாவட்டத்தில் முன்மாதிரி கிராமமாக 10 கிராமங்களை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அதில் நல்லம்பள்ளி வட்டம், இண்டூர் கிராமம் ஒன்றாகும். இக்கிராமத்தில் பல்வேறு துறையின் மூலமாக முன்னுரிமை அடிப்படையில் நலத்திட்ட உதவிகளை செய்து வருகிறோம். தற்போது 4-வது சுற்று நிறைவடைந்து 5-வது சுற்று நடைபெற்று வருகிறது. மேலும் இம்முகாம்களில் வருவாய்த்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, கால்நடைத்துறை வேளாண்மை பொறியியல் துறை, மருத்துவ சுகாதாரத்துறை, புதுவாழ்வுத் திட்டம் என அரசின் பல துறைகளின் சார்பில் திட்டங்கள் குறித்த பதாகைகளை பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வண்ணம் அமைக்கப்பட்டிருந்ததை பொதுமக்கள் பார்வையிட்டு தங்களுக்கு தேவையான அரசு திட்டங்களை கேட்டறிந்து பொதுமக்கள் பயனடைந்து வருகிறார்கள்.

மேலும் வருவாய் துறை, மாவட்ட வழங்கல் துறை சார்பில் மாதத்தின் 2-வது சனிக்கிழமையன்று பட்டா, சிட்டா பெயர் மாற்றம் மற்றும் புதிய குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பித்தல், குடும்ப அட்டையில் பெயர், சேர்த்தல், நீக்கல், திருத்தம் போன்ற அனைத்து வசதிகளும் இணையதளத்தின் மூலம் பொதுமக்கள் விண்ணப்பிக்கலாம். அவ்வாறு விண்ணப்பிக்கும் போது தங்களுடைய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதா என்ற குறுஞ்செய்தியை உடனடியாக தெரிந்து கொள்ளலாம். மேலும் இணையதளத்தின் வாயிலாக வட்ட வழங்கல் மூலம் இதுவரை 15000 மனுக்கள் பெற்று தீர்வு காணப்பட்டுள்ளது. மேலும் அம்மா திட்ட முகாம் தமிழக அரசால் நடத்தப்பட்டு அனைத்துத்துறை அலுவலர்களின் மூலம்

பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு அன்றே பரிசீலனை செய்யப்பட்டு தகுதியுள்ள மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காணப்படுகிறது.

இப்பகுதி விவசாயிகள் தோட்டக்கலைத்துறையின் சார்பில் சொட்டுநீர் பாசனத்திற்கான விண்ணப்பித்தினை இத்துறையின் மூலம் பெற்று விண்ணப்பித்து 100 சதவீத மானியத்துடன் பெற்று பயனடைய வேண்டுமெனவும், வேளாண்மைத்துறையின் சார்பில் டிராக்டர், ரோட்டாவேட்டர், விசைத்தெளிப்பான், நிலக்கடலை போன்றவை மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல் மாவட்ட ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் தனிநபர் கழிப்பறை அமைக்க அரசு ரூ. 12 ஆயிரம் மானியம் வழங்குகிறது. அதனை பெற்று தனிநபர் கழிப்பறை அமைக்க பொதுமக்கள் முன்வர வேண்டும்.

மேலும் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் கால்நடை வளர்ப்போர்கள் பயனடையும் வகையில் 2011-12 முதல் 2015-16ம் ஆண்டு வரை மாநில தீவன அபிவிருத்தி திட்டம் மற்றும் மத்திய விரைவு தீவன அபிவிருத்தி திட்டங்களின் மூலம் தர்மபுரி மாவட்டத்தில் 75410 பயனாளிகளுக்கு 79.46 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு செயல்படுத்தப்பட்டது. அசோலா பாசி வளர்த்தல் 100% மானியத்தில் 1142 பயனாளிகளுக்கு 16.55 இலட்ச மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 2016-17-ல் கால்நடை வளர்ப்போர் பயனடையும் வகையில் மாநில தீவன அபிவிருத்தி திட்டங்களின் மூலம் தருமபுரி மாவட்டத்தில் 17940 பயனாளிகளுக்கு 97.475 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அசோலா பாசி வளர்த்தல் 100% மானியத்தில் 150 பயனாளிகளுக்கு 3.825 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சுகாதாரத்துறையின் சார்பில் தமிழகத்திலேயே மணல்வாரி (துட்டம்மை) ரூபெல்லா தடுப்பூசி 100 சதவீதம் முழுமையாக போடப்பட்டுள்ளது. நமது மாவட்டம் இந்த மணல்வாரி (துட்டம்மை) ரூபெல்லா தடுப்பூசி வழங்கியதில் முதலிடத்தை பிடித்துள்ளது. அதேபோல் இந்தியாவிலேயே மூன்றாம் இடத்தை பிடித்துள்ளது.

மேலும் பொதுமக்கள் தங்களுக்கு தேவையான ஜாதி சான்று, வருமானம் சான்று, இருப்பிடச்சான்றிதழ் பெற அந்தந்த பகுதிகளில் உள்ள கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலகங்களிலும் விண்ணப்பித்துக்கொள்ளலாம் எனவும், பொதுமக்களுக்கு ஏதேனும் விவரங்கள் அறிய வேண்டுமெனில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் இயங்கி வரும் 1077, 1800 425 7016, 1800 425 1071 மற்றும் வாட்ஸ் அப் எண். 8903891077 ஆகிய எண்களின் மூலமாக பொதுமக்கள் தங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மற்றும் புகார்களையும் கூறலாம். மேலும் அம்மா கைபேசி எண். 1100 எண்ணின் மூலமாக தங்களது குறைகளையும் மற்றும் கோரிக்கைகளையும் தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக 124 மனுக்கள் பெற்று சம்மந்தப்பட்ட அலுவலரிடம் வழங்கி உடனடி தீர்வு காணப்பட்டது.

இம்முகாமில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் திரு. அமீர்பாஷா, வேளாண்மை உதவி இயக்குநர் திருமதி. அமுதவள்ளி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. இரா. சண்முகசுந்தரம், தோட்டக்கலை உதவி இயக்குநர் திரு. ராஜன், மாவட்ட குழந்தைகள் ஒருங்கிணைப்பு நல அலுவலர் திருமதி. பத்மாசனி, மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு. மகிழ்நன், வட்டாட்சியர் திரு. ராஜசேகரன், வட்ட வழங்கல் அலுவலர் திரு. ராஜராஜன் உட்பட துறை ரீதியான அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.